# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### THE NEW INDIAN EXPRESS DATED 10.05.2025

# 'Tear markers could help detect diabetic retinopathy'

XPRESS NEWS SERVICE
@ Puducherry

N a major breakthrough, re-earchers at Pondicherry Uni-ersity have identified molecu-ar markers in tear fluid that ould enable early, non-invasive etection of diabetic retinopa-hy (DR)—long before structur-l damage appears in the etina.

Led by Subbulakshmi hidambaram of the Depart-ent of Biochemistry and Mo-ecular Biology, the study highlights the potential of non-coding RNA biomarkers in tears to signal retinal stress in its earliest stages. "While automated tools detect DR only after damage is visible, our aim is to intervene much earlier," said Chidambaram.



Subbulakshmi Chidambaram

The team plans to develop a compact, point-of-care device—similar to a glucose meter—that can analyse tear samples within minutes. Such a tool could improve screening access for India's 77 million diabetics, especially in rural areas.

Backed by the Department of Biotechnology (DBT), Anusandhan National Research Foundation (ANRF), and the Indian Council for Medical Research (ICMR), the project also supports long-term goals in drug discovery and biomarker-led diagnostics. Infrastructure support is being provided through the Department of Science and Technology's FIST programme.

The research aligns with Prevention of Blindness Week (April 1–7), underscoring the urgency of tackling causes of vision loss like diabetic retinopathy and age-related macular degeneration. "We're committed to translating this research into real-world impact," said Thirunavukkarasu, Head of Department.

### NAMADHU MURASU DATED 10.05.2025

# சிருஷ்டி பவுண்டேஷன் ஆட்டிசம் பயிற்சி நிறுவனத்துக்கு கல்லூரி மாணவர்கள் களப்பயணம்



புதுச்சேரி, மே. 10-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி உயிர்வேதியியல் துறை மாணவர்கள் சமுதாய பணி பயிற்சியின் இறுதி நிகழ்ச்சியாக சிருஷ்டி பவுண்டேஷனில் மாணவர்கள் பல்வேறு செயல்பாடுகளை அறிதல் தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

சிருஷ்டி பவுண்டேஷனின் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) பேராசிரியர் லலிதா ராமகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார். இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி புதுவை சேர்மேன் டாக்டர் லட்சுமிபதி, பொருளாளர் பாஸ்கரன், நிர்வாகக் குழு உறுப்பினர் அய்யனார் மற்றும் யூத் ரெட் க்ராஸ் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருண் நாகலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிருஷ்டி அறக்கட்டளை தலைவர் கார்த்திக் அனைவரையும் வரவேற்று அறக்கட்டளையின் பணிகளை பற்றி உரையாற்றினார். உதவி பேராசிரியர்கள் முனைவர் வரலட்சுமி மற்றும் முனைவர் தாரஹேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள் சமூக ஈடுபாட்டு திட்டத்திற்காக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியால் ஏற்பாடு செய்யப்பட்ட சிருஷ்டி ஆட்டிசம் கிராமத்தை பார்வையிட்டனர் மாணவர்கள் ஆட்டிசம் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் வாய்ப்பளிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சியை ரெட் க்ராஸ் சொசைட்டி ஏறபாடு செய்து இருந்தது. மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, தனது மனைவியுடன் அறக்கட்டளையைப் பார்வையிட்டார். துணைவேந்தர் அறக்கட்டளையின் பணிகளைப் பாராட்டினார், மேலும் மிகுந்த ஆர்வத்துடன், சிருஷ்டி அறக்கட்டளையின் அனைத்து பிரிவுகளையும் பார்வையிட்டபோது, ஆட்டிசம் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

சிருஷ்டி அறக்கட்டளை, சமுதாயக் கல்லூரி மற்றும் இந்தியன்ரெட்கிராஸ்சொசைட்டி சார்பில் துணைவேந்தர் கௌரவிக்கப்பட்டார்.

நாள் முழுவதும், மாணவர்கள் பைகள் மற்றும் பாய்கள் தயாரித்தல், கால்நடை பண்ணைகளைப் பார்வையிடுதல், குளம் கட்டுமானத்தில் பங்கேற்பது மற்றும் தோட்ட வேலைகளுக்கு உதவுதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம், ஆட்டிசம் உள்ள நபர்களைப் புரிந்துகொள்வதிலும், கையாள்வதிலும் மாணவர்கள் மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றனர். ஆட்டிசம் ஸ்பெக்ட்ரமில் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது பொறுமை, நிதானம், பரிவு மற்றும் தெளிவான தகவல்தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் கற்றுக்கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி செய்து இருந்தது.